DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 79/2021 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W. |
| | | Defence |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | தங்கபிரகாஷ் | தொழில் | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | ஜாதி | |
| கிராமம் | : | | இனம் | |
| தாலூக்கா | : | | வயது | |
| Mail ID | : | | Mobile No. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on08.01.2025

முதல் விசாரணை

நான் தற்போது வால்பாறை வன சரகத்திற்கு உட்பட்ட அக்காமலை பிரிவில் வனவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2021 ம் வருடம் உடுமலை வனச்சரகத்திற்கு உட்பட்ட தளி பிரிவில் வனவராக பணியில் இருந்த போது 29.08.2021 ம் தேதி கரட்டுர் பிரிவு கரட்டுர் சுற்று வனக்காப்பாளர் திரு ஞானசேகரன் வனச்சரக அலுவலருக்கு போன் மூலம் ஒற்றை தந்தத்துடன் கூடிய யானை ஒன்று சடையம் பாறை சரக பகுதியில் இறந்து கிடந்ததாக தகவல் தெரிவித்தார். தகவலை வனச்சரக அலுவலர் மூலம் தெரிந்து கொண்டு உதவி வன பாதுகாவலர் வனக்கால்நடை மருத்துவர் சுகுமாறன் மற்றும் கரட்டுர் உதவி வன கால்நடைமருத்துவர் தலைமையில் சம்பவ இடத்திற்கு சென்றோம். அப்போது மாலை நேரம் ஆகிவிட்டதால் மறுநாள் காலை சுமார் 11.00 மணியளவில் கால்நடை மருத்துவர் அவர்கள் பிரேத பரிசோதனை மேற்கொண்டனர். யானையானது வலதுபுறம் சாய்ந்த படி இடது புறம் தந்தம் வெட்டி எடுக்கப்பட்ட நிலயல் இருந்தது.

2. வனப்பணியாளர்கள் மற்றும் காட்டுப்பட்டி ஊர் மக்கள் உதவியுடன்

யானையானது இடது புறம் திருபபி போடப்பட்டது. அப்போது வன கால்நடை மருத்துவர் அவர்கள் கொண்டு வந்த மெட்டல்டிடக்டர் கருவி மூலம் சோதனை செய்து பார்க்கப்பட்டது. சோதனையின் போது வலதுபுறம் கண் மற்றும் தோள் பட்டை பகுதியில் சில பால்ரஸ் குண்டுகள் பட்டு தோள் மூடிய நிலையில் இருந்தது கண்டறியப்பட்டது. பின்னர் கால் பகுதியில் சில பால்ரஸ் குண்டுகள் பட்டு தோள் மூடிய நிலையில் இருந்தது கண்டறியப்பட்டது. பின்னர் யானை ஒற்றை தந்தத்துடன் கூடிய யானை என்று ஊர்மக்களிடம் இருந்து தெரிந்து கொண்டோம். உள் தந்தத்தின் நீளம் சுமார் 37 செ.மீ சுற்றளவு 34 செமீ. கரட்டுர் பிரிவு வனவர் ஸ்தல மகசர் மற்றும் ஸ்தல வரைபடம் தயார் செய்தார். பின்னர் உதவி வனப்பாதுகாவலர் தலைமையில் வனச்சரக அலுவலர் தனபால் வனவர் கோபாலகிருஷ்ணன் மற்றும் நான் அடங்கிய குழுவினர் யானை இறந்தது சம்பந்தமான புலன் விசாரணையை தொடங்கினோம்.

3. அப்போது 02.09.2021 ம் தேதி உடைந்த பாலம் அருகில் சோதனை மேற்கொண்ட போது வடக்கு பகுதியில் சுமார் 400 மீ தொலைவில் மஞ்சள் மற்றும் வெள்ளை உர சாக்கு பையில் சந்தேகத்திற்கு இடமாக வகையில ஒரு பொரூள் இருந்தது. திறந்த பார்த்தத போது யானையின் தந்தம் இ்ருந்தது. யானையின் தந்தத்தின் நீளம் 128 செமீ சுற்றளவு 34 செ.மீ இறந்த யானையின் தந்த அளவுடன் ஒத்திருந்தது. பின்னர் அந்த யானை தந்தத்தை வனக்காப்பாளர் ஞானசேகரன் அவர்கள் H நமுனா மூலம் பறிமுதல் செய்யப்பட்டு மேற்படி குற்றவாளியை தேடும் பணியல் தனிக்குழுவானது செயல்பட்டது. பின்னர் தனிக்குழுவினர் குற்றவாளியை தேடும் பொருட்டு அப்பகுதி சுற்றியுள்ள பகுதியில் விசாரணனை மேற்கொள்ளப்பட்டது

4. அப்போது 22.09.2021 ம் தேதியன்று தனிக்குழுவினர் நல்லாறு பகுதியில் ரோந்து பணியை மேற்கொண்டிருந்த போது எங்களை கண்டதும் பாறையில் அமர்ந்து இருநத 4 நபர்கள் ஓடினார்கள். அதில் இருவர் மட்டும் பிடிப்பட்டனர். மற்றவர்கள் எங்களை பார்த்ததும ஓடி விட்டனர். பிடிப்பட் இருவர் சின்னதங்கம் , வேலு ஆகும். இவர்களிடம் விசாரணை செய்ததில் சடையம் பாறை பகுதியில் இறந்து கிடந்த யானையின் ஒற்றை தந்தைத்த வியாபார நோக்கத்திற்காக வெள்ளை சாமி திருமண் மற்றும நாங்கள் அதை வெட்டி வியாபாரம் செய்ய எடுத்தோம். அதில் வெள்ளை சாமி கோடாரியால் வெட்டியும் திருமண் அருவாள் கொண்டு வெட்டியதாகவும் கூறினார்.

5. நாங்கள் அருகில் வேறு யாராவது வருகிறார்கள் என்று பார்த்து கொண்டிருந்தோம் அவர்கள் சொன்ன வாக்குமூலத்தை சின்ன தங்கம் என்பவரிடம், நானும் வேலு என்பவரிடம் தனபால் அவர்களும்

வாக்குமூலத்தை பதிவு செய்தோம். ஸ்தலத்தில் பதிவு செய்தததாக கையொப்பம் கூறியுள்ளேன். அந்த கையொப்பம் மட்டும் அசா.ஆ. 9 என குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக என்னை வனச்சரக அலுவலர் விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. ைஹதராபாத்திற்கு தந்தத்தை ஆய்விற்கு அனுப்பிய நிலையில் இந்த யானையின் தந்தமா என்று உறுதி செய்யமுடியாது என்றால் நீளம் சுற்றளவுகள் ஒத்திருந்தது. ஆனால் உங்கள் துறையில் இறந்த யானையில தந்தம் தான் ஆய்விற்கு அனுப்பியது என்று அறிக்கை பெறப்படவி்லை என்றால் சரிதான் நான் இருக்கும வரை பெறவில்லை. உங்களுடைய பணி பகுதி தளி என்றால் சரிதான். இந்த பணிக்கான உத்தரவுகளை வனசசரக அலுவலர் விசாரித்த போது தாக்கல் செய்திர்களா என்றால் இல்லை எனது வனப்பகுதிக்கு அருகில் உள்ளது.

2. நீங்கள தயாரித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கண்டுள்ள தேதி மாதம் நேரம் வனக்குற்ற எண் எதிரிகளுக் தெரிய வாய்ப்பில்லை என்றால் சரிதான். அதை ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிக்ள் எதிரிகள் சொன்னது அல்ல என்றால் வனக்குற்ற எண் சொல்லவில்லை மற்ற சங்கதிகள் சொன்னார்கள். யானை இறந்து கிடந்த இடத்திற்கு அருகில் வஞ்சி அவர் மகன் கஞ்சி பூமி ஒட்டி இருந்தது என்றால் சரிதான். அந்த பூமியில் பீன்ஸ பயிரிடப்ட்டது என்றால் ஞாபகம் இல்லை ஆனால் விவசாயம் செய்திருந்தார்கள்.

3. அந்த பூமியில் விவசாயம் செய்து இருந்தால் இரண்டு நேரமும் காவல் காக்க வேண்டும் என்றால் சரிதான். யானை இறநது எவ்வளவு நாள் கழிதது தகவல் கிடைத்தது என்றால ஆய்வறிக்கை படி 2–3 நாட்கள் கழித்து. 3 மற்றும் 4 ம் எதிரிகளை ஆழியாறு கைகாட்டி பகுதியில் நீங்களும் வனச்சரக அலுவலரும் அவர்களை கைது செய்ததற்காக உங்கள் அலுவலகததில் மற்றும் ஆர்டிஒ அலுவலத்தில் மறியல் செய்தார்கள் என்றால் நாங்கள் நல்லாறு பகுதியில் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி ஈடுபட்டிருந்ததில் முற்றுகை பற்றி தெரியவில்லை. வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல. அங்கிருக்கும பூமிகள் வானம்பார்த்த பூமி என்றல் சரிதான் . உரமிட்டும், ஊற்றம் ஏற்றிய பயிர்களை பயிரிடுவதில்லை என்றால் சரிததான பீன்ஸ் போன்ற பயிர்கள் தான் விளைவிப்பார்க்ள். உரம் இடுவதில்லை என்றால் சரிதான். இந்த மேற்படி பூமி மலைக்குள் இருக்கும் பூமி என்றால் அவரது அனுபவத்தில் இருக்கும் பூமி.

5. நிலக்காடுகள் ராவணகாடு தேவனுார் புதுார் போன்ற பூமியில் உரங்கள் இடுவார்கள் என்றால் சரிதான். யானை இறந்து கிடந்த இடத்தில்

குழிப்பட்டி குறுமலை, பூச்சங் கொடடாம் பாறை செல்லும் தடம் உள்ளது என்றால் சாலையில் இருந்து யானை இறந்த இடம் சுமார் 400–500 மீ தொலைவில் இருக்கும் , புதர் மண்டி இருக்கும். மேற்படி தடம் எளிதில் கண்ணுக்கு புலப்பட இடத்தில் தான் யானை இறந்து கிடந்தது என்றால் இல்லை. நீங்கள் எவ்வாறு தெரிந்து கொணடிர்கள் என்றால் வனக்காப்பாளர் தகவல் சொன்னதன் பேரில். நீங்கள் ஒப்புதல் வாக்குமூலத்தில் எழுத்து வடிவிலோ அல்லது டைப் செய்யும் முறையில் தமிழ் பேச மாட்டார்கள் என்றால் சரிதான்.

6. ஒப்புதல் வாக்குமூலத்மானது எதிரிகள் கூறும் உச்சரிப்பில் பதிவு செய்யவேண்டும் என்றால் உச்சரிப்பில் அவ்வளவு வித்தியாசம் வராது. அவர்கள் உச்சரித்த விதத்தில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் ஒப்புதல் வாக்குமூலத்தில் எழுதிய வார்த்தைகள் போல் அவர்கள் பேச மாட்டார்கள் என்றால் சரியல்ல. நீங்கள் ஒப்புதல் வாக்குமூலத்தில் உங்களது அலுவலகத்தில் வைத்த தயார் செய்து விட்டு தற்சமயம் ஸ்தலத்தில் வைத்து தயாரிக்கப்பட்டகாக ஆதரவாகபொய் சாட்சியம் அளிககிறிர்கள் என்றால சரியல்ல.

7. ரோந்து சென்ற போது என்ன என்ன பொருட்கள் எடுத்து சென்றிர்கள் என்றால் கத்தி, பெயிண்ட். அவை மட்டும் எடுத்து சென்றிர்கள் எனறால் சரிதான். சம்பவ இடததில் இருந்து குழிப்பட்டி மாவடைப்பு எவ்வளவு துாரம் என்றால் குழிப்பட்டி 6 கிமீ மாவடப்பு சுமார் 3 கிமீ இருக்கும். 2 ஊர்களிலும் அரசு ஆசிரியர் தங்கி பாடம் எடுத்து வருவது தெரியும் என்றால் தெரியும் அங்கு தங்குவது உண்மை கிடையாது. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் அப்பா் ஆழியாறு மற்றும் காடம்பாறை எவ்வளவு துாரம் என்றல் அப்பா் ஆழியாறு சுமார் 10 கிமீ இருக்கும். காடம் பாறை சுமார் 20 கிமீ.

8. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள திருமண் மற்றும் சின்னதங்கம் உடன் பிறந்தவர்கள் என்ற விவரம் தெரியாது என்றால் தெரியாது. திருமண் மற்றும் சின்னதங்கம் ஆகியவர்கள் உடன் பிறந்தவர்கள் என்பதால் சகோதரரை குற்றவாளியாக ஒப்புக் கொள்ள மாட்டார் என்றால் சரிதான். யார் யாரை கைது செய்தது குறித்து சொல்ல இயலாது என்றால் சரிதான். உண்மையில் சொன்ன விதத்தில் கைது செய்து இருந்தால் கைது செய்த விவரத்தை சொல்லியிருப்பிர்கள் என்றால் சரியல்ல. யானை திருபபி படுக்க வைக்க மக்கள் உதவியாக இருந்த நிலையில் அவர்களை சாட்சியாக போடவில்லை என்றால் ஊர மக்களிடம் விசாரித்து வாக்குமூலம் பெற்றோம்.

9. காட்டுப்பட்டிக்கு வேட்டை தடுப்பு காவலர் லட்சுமணன் என்றால் சரிதான். வனப்பகுதி சுமார் 60000 ஆயிரம் ெஹக்டேர் பரப்பளவு

கொண்டது என்றால் சரிதான். அவர்களின் பிரதான தொழில் தேன் எடுப்பது என்றால் கால்நடை மற்றும் விவசாயம் . பருவக்காலங்களில் மட்டும் தேன் எடுப்பார்கள். உங்களை விட இந்த வனத்தை பற்றிய அனுபவம் அவர்களுக்கு அதிகம் என்றால் சரிதான். இந்த எதிரிகள் சொன்ன படி பொருள்கை மறைத்து வைக்க இந்த வனத்தில் நிறைய இடம் தெரியஹம என்பதால் கண்ணுக்கு புலனாகாத இடத்தி மறைத்து வைக்க இயலும் என்றால் சம்பவ இடத்திற்கு மோப்ப நாய் உதவியுடன் சோதனை செய்ததால் வீட்டில் வைத்தால் தெரிந்து விடும் என்பதால் புதரில் வைத்திருந்தார்கள்.

10. நீங்கள ஒப்புதல் வாக்குமூலம் பெற அரசு அதிகாரிகளை அருகில் வைத்து தயாரிக்க முற்படவில்லை என்றால் காப்புகாடாக இருப்பதால் எங்கள் அலுவலரை சாட்சியாக போட்டுள்ளோம். சொன்னது போல் எதிரிகள் சம்பவத்தில ஈடுபடவில்லை என்றாலும் 3, 4 ம் எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. மலை கல்வி நிலையங்களுக்கு தனியாக விடுமுறை நாட்கள் இல்லை என்றால் அடிப்படை வசதி இல்லாததால் அனைத்து நாட்களிலும் செயல்படுமா என்று கூற இயலாது.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.